தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2019 சுறவம் (15-31-1-1988) சன-88 85 காசுகள் (இதழ் எண்: 98 -- 99)

எம். சி. ஆர். என்னும் அடைப்புக் கல் அகன்றவுடன், சாய்க்கடைத் தேக்கத்தின் கழிவுநீர் பரவித் தமிழகத்தையே நாற அடித்து விட்டது!

ஒரு கொள்ளை-கொலை-வெறிக் கூட்டத்தையே உருவாக்கி விட்டுப் போயிருக்கிறார், எம்.சி.ஆர். என்பதற்கு இன்றைய நடவடிக்கைகளே சான்று!

- இது கடந்த 10 ஆண்டுகளாகத் தமிழகத்தையே மலக்காடாக்கிய எம். சி. ஆரை முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுத்த மக்களுக்குக் கிடைத்த தண்டனை!

எதிர்கால அரசியல் வரலாற்றில் இப்படிப்பட்ட அருவருப்பான் வெறிச் செயல்கள் இருக்கக் கூடாது என்பதற்கான எச்சரிக்கையே இது!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

எங்கள் கருத்துகள்

தமிழகச் சட்டமன்றத்திற்கு ஒரு வேண்டுகோள்:

உங்களுக்கு நெகிழும் உள்ளங்களாகிய நாங்கள் உரைப்பது இதுதான்:—

இந்திய அரசு ஈழ விடுதலைப் புலிகளுடன் போரிடுவதை இனியாவது உடனே நிறுத்த வேண்டும். இந்தியத் தேசிய இனங்களின் பண்பாட்டிற்கும், கூட்டமைப்பிற்கும், இந்திய அரசுக்கும், இதுவே நன்மை. புலிகளோடு போரிடுவதைப் போல் கொடிய தீமை நமக்கு வேறெதுவும் இல்லை.

இந்திய அரசு, ஈழ விடுதலைப் புலிகளை இரக்கமின்றிக் கொல்வது அறமா? அவர்கள் குழந்தைகள், அரும்புகள் கொடுமைக்குப் பணிய மாட்டார்கள். அறிவுரை, அன்புரை, பெருந்தன்மையோடு அவர்களைப் பேணிடும் தன்மை — ஆகியவையே அவர்களை மனம் மாற்றும்.

இந்தியப் படை வலிவு பெரிது என்பதால் "கருவிகளைப் போடு கீழே — பணிந்து நில், இன்றேல் அழிப்பேன்" — என்பதை உரிமைக்குப் போராடும் ஈக (தியாக) உள்ளங்களைப் பார்த்தா கேட்பது?

செயவர்த்தனாவைப் பார்த்து என்றோ இந்தக் கேள்வியை இந்திய அரசு கேட்டிருக்க வேண்டும். கருவியால் விடை சொல்லியிருக்க வேண்டும். அது மாந்தநேயம் (மனிதாபிமானம்).

அதை விடுத்து உயிரைத் தூசாய் மதித்து, உரிமைக்குப் போராடும் விடுதலைப் புலிகளை இன்று இந்திய அரசு வேட்டையாடுவது மாந்தநேயமா?... மாறாத களங்கம், பெரும்பழி, வரலாற்றுக் கறை!

இந்தப் பெரும் பழியைத் தமிழகச் சட்டமன்றம் துடைக்க விரும்பினால்:—

"இந்திய அரசு ஈழ விடுதலைப் புலிகள் மீது தொடுத்துள்ள போருக்காகத் தமிழக சட்டமன்றம் வருந்துகிறது. இனியாவது விடுதலைப்புலிகளுடன் நடத்தும் போரை இந்தியா உடனே நிறுத்தவேண்டும். விடுதலைப்புலிகளுடன் பெருந்தன்மையோடு பேச்சுரை நடத்த வேண்டும்"

—என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி நடுவண் அரசுக்கு அனுப்பி வைப்பீர்களானால் அதுவே செய்தக்க செய்த உலக நெறி, வாழ்வியல் நெறி, உயிரோம்பும் அறம்.

செய்வீர்களா? அன்புள்ள,

— நீறணி - திருப்பூர்

'படி' தங்கள் பார்வைக்கு.

தமிழரசன் அறியாதவரா?

அன்புள்ள ஐயா அவர்களுக்கு, வணக்கம், நலம், தாங்களும் குடும்பத்தினரும் நலமுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன்... தமிழ் நிலத்தில் தமிழரசன் மறைவு குறித்தும், அவரது வைப்பகக் கொள்ளையடிப்பு முயற்சி குறித்தும், கருத்துப் பரிமாறல்கள் நடக்கின்றன. இது போன்ற ஆய்வுக்கு உரிய கருத்துகளுக்குத் தற்போது இடம் அளிக்க வேண்டாம் என்று தோன்றுகிறது. பாலத்தைத் தகர்த்து விட்டுத் தொலைபேசியில் அறிவித்துத் தொடர் வண்டிச் சிக்கலை எங்ஙனம் தவிர்க்க முடியும்? நமது தொடர்வண்டி அலுவல்களைப் பற்றித் தமிழரசன் அறியாதவரா? எத்தனைக் குற்றமற்ற உயிர்கள் இறந்து போயின! மக்கள் கவன ஈர்ப்புக்கு எத்தனையோ வேறு பல வழிகளைக் கையாண்டிருக்காலம். உயிர்ப்பலி நிகழ்வது தவிர்க்கப் படவேண்டிய ஒன்று. தங்கள் அன்பு,

— மருத்துவர். அ. விசுவநாதன், ஆத்தூர். 2

தமிழர்கள் ஏமாளியா?

அன்புடையீர்,

தங்களின் 20-7-87 'தமிழ் நிலத்'தில், "ஈழப் போராளிகள் சோர்வடைய வேண்டா --- விடுதலைக்கு நாம் இன்னும் விலை கொடுத்தாக வேண்டும்" என்று எழுதியிருப்பது எத்துணை உண்மை! கருத்துப் போராட்டத்தையும் தாண்டி, கருவிப் போராட்டத்தில் — போர்க்களம் புகுந்து விட்ட தமிழீழப் போராளிகள் — "ஈழ விடுதலையைத் தவிர வேறெதுவும் வேண்டா, என்று முழங்கி, இழிந்து போன இந்திய — சிங்கள உடன்பாட்டை எவ்வகையிலும் ஏற்கமாட்டோம் ஈழத் தமிழர்களுக்குச் சவகுழியாகும் 'ஒப்பந்தம்' எங்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது; எல்லா வகையானும் நாங்கள் இந்தியப் படையையும் எதிர்த்தே தீருவோம் என்று — முதலிலேயே கூறி — கருவி ஒப்படைப்பு விழா நடத்தாமலே - இந்தியப் படையுடன் மோதியிருக்கலாமே! பெருமையாயும் இருந்திருக்கும்.

இந்திய வல்லரசை ஈழப் போராளிகள் 'எப்படித்தான் — ஏன்தான் நம்பினார்கள்' என்றே புரியவில்லை!

உலகத்தில் தமிழர்கள்தாம் ஏமாளிகளா? இங்குள்ள (தமிழ்மண்ணில்), என்றும் உண்மையான அடிமைத் தமிழர்களுக்கு விடுதலைப் புலிகளின் "புறநானூற்று" வீரப்போரை எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை; செரித்துக் கொள்ளவும் முடியவில்லை? இன்றைக்கு ஈழத்தமிழர்களைக் கொல்லும் இந்தியப் (வல்லரசின்) படை நாளையே தமிழ் நாட்டுத் தமிழர்களைக் கொல்லாது என்பதற்கு எந்த வெங்கட்டராமன் — சுந்தர்சி — மூப்பனார் — பழனியாண்டிகள் உறுதி கூற முடியும்?

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழகச் சட்ட மன்றம் அரம்பர்களின் சந்தைக் காடாகி விட்டது!

இந்நிகழ்ச்சிகளால், அரசியலில், தமிழகம் காயடிக்கப் பட்டு விட்டது!

இனி, நெடுங்காலத்திற்கு ஆண்மையற்ற அல்லது அடிமைத் தனமான அரசே இங்கு நடைபெற முடியும்!

தமிழகத்தின் அரசியல் வரலாறு ஓர் இழிந்த கால கட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதையே தமிழகச் சட்டமன்றத்தில் கடந்த 28-1-88- இல் நடந்த — சானகி இராமச்சந்திரனின் நம்பிக்கைத் தீர்மான நிகழ்ச்சிகள் நமக்குப் புலப்படுத்திக் காட்டுகின்றன.

இவ் வருவருப்பான — விரும்பத்தகாத — இழிவான — காட்டு விலங்காண்டித்தனமான — சட்டத்திற்குப் புறம்பான — அரசியல் பண்பாட்டுக் குறைவான — மாந்தநேயத்திற்கு மாறான — வெறித்தனமான — இதுவரை இந்திய அரசியலிலேயே நடந்திராத — எதிர்கால அரசியலுக்கே சூளுரைக்கக் கூடிய — கோழைத்தனமான — அரம்பத்தனமான — நிகழ்ச்சிகள் இன்றைக்கு இங்கே நடந்திருந்தாலும், இவற்றுக்கு வித்தும் எருவும் நீரும், மறைந்த முதலமைச்சர் ம. கோ. இராமச்சந்திரன் காலத்திலேயே இடப்பட்டிருந்தன. **'விரையொன்று போட்டால் சுரையொன்று முளையாது'** என்பது நாட்டுப் பழமொழி **'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்'** என்பது திருக்குறள். எனவே, எம். சி. ஆர். எனப்பெறும் ம. கோ. இராமச்சந்திரன் விட்டுச் சென்ற அரசியல் எச்சங்கள்தாம், இன்றைக்கு இந்த நிலைக்குத் தமிழகத்தைத் தாழ்த்தி விட்டன என்பது யாராலும் மறுக்க முடியாது. இந்த எச்சங்களை வைத்தே, இவர்களை வளர்த்தெடுத்த அரசியல் ஆசானாகிய ம. கோ. இரா வின் தகுதியையும் தகவின்மையையும் உறுதிப் படுத்திக் கொள்ளலாம். இவற்றைப் பார்க்கையில் எம். சி. ஆர். மேல் அவர்கள் வைத்த பற்று, மதவெறியை விடக் கொடுமையானதாகும், என்பது புலப்படும்.

ம. கோ. இரா. கடைசிவரை ஒரு தந்நலக் கும்பலின் தலைவராகவே இருந்து விட்டுப் போய் விட்டார். தங்களைப் பற்றியன்றி, மக்களைப் பற்றித் துளியும் கவலை கொள்ளாத ஒரு கூட்டத்தையே அவர் உருவாக்கியிருக்கிறார் என்பது, இப்பொழுது அனைவர்க்கும் விளங்கியிருக்கும். எம். சி. ஆர். புகழ்பாடியதெல்லாம் வெறும் வெளிப் பகட்டே என்பதும் உணரப் பெற்றிருக்கும். அவரின் அரசியல் மாய முகப் பூச்சு களைந்தவுடன், அவரின் உண்மையான முகரக் கட்டையின் வடிவத்தை அனைவருமே மேற்கூறிய சட்டமன்ற நிகழ்ச்சிகளால் கண்டிருப்பர்.

இனி, இதுவும் மட்டுமன்றி, இந்திராக் கட்சி, (இப்பொழுது இராசீவ் கட்சி) என்பது, எப்படி முழு நயவஞ்சகத்தின் வடிவம் - நம்பவைத்துக் கழுத்தறுக்கும் கூட்டம் — தமிழினத்தின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் மாறான, வேறான கும்பல் — என்பதை அ. தி. மு. க. சந்தைக் கூட்டத்தில், திராவிட இன மரபு மாறாத உணர்வுள்ளவர்களாகத் தங்களைக் கருதிக் கொண்டிருக்கும் விரப்பன், காளிமுத்து, இராசாராம், நெடுஞ்செழியன் போன்ற — ஒரு சிலராகிலும் உணர்ந்து கொள்ளட்டும். அத்துடன் இந்நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, 'முதுகில் குத்துவதே இந்திரா பேராயம்' என்றபடி அ. தி மு. க. விற்கு அரசியல் அறிவுரை கூறுகின்ற கலைஞரும், தமிழின முன்னேற்றம் கருதி, இனியாகிலும் உண்மை உணரட்டும். மேலும், அவர் விரும்புகின்ற அல்லது எதிர்பார்க்கின்ற — அல்லது ஆளுங் கட்சியின் வடிவத்தில் பார்க்கின்ற — இத்தகைய அருவருப்பு நடவடிக்கையெல்லாம் இல்லாத — ஒரு தூய்மையான அரசியல் — இந்தத் தலைமுறையிலும், இனி வருகின்ற தலைமுறைகளிலும் வாய்க்குமா என்பது ஐயமே! அதனால் அவர் அரசியல் சாய்க்கடையினின்று மீண்டெழுந்து தமிழின நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பயன்தருகின்ற நேரடிப் போராட்ட நடவடிக்கைகளிலேயே ஈடுபடுவது நல்லது.

இனி, நடந்துவிட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு சில. பதவி — பணச் — சண்டையால் தன்னையே சீரழித்துக் கொண்டது அ. தி. மு. க. ஓநாயிடம் குள்ளநரி தன்னலத் தொடர்பு கொண்டு, தன் கூட்டத்தையே அழித்துக் கொண்டதுபோல, இந்திராவிடமும் அவர் மகன் இராசீவிடமும் தொடர்பு கொண்டு, தனக்கிருந்த மக்கள் நம்பிக்கையே அழித்துக் கொண்டது அ. தி. மு க. அத்துடன், தமிழ் நாட்டின் ஓநாய்க் கூட்டத்திலும் உடைசல் ஏற்பட்டுள்ளது.

இனி, வரலாற்றிலேயே முதல் முறையாகச் சட்டமன்றத்தில் காவல் துறை நுழைந்துள்ளது. அஃதாவது, வேட்டைக்காரர்களையே வேட்டை நாய்கள் கடித்துக் குதறியுள்ளன.

இவையெல்லாம், எதிர்கால அரசியல் மேம்பாட்டிற்குச் சில நல்ல அறிகுறிகளே என்று நாம் மதிப்பிடுகின்றோம். பொய்களின் உண்மை வடிவம் வெளிப்பட வெளிப்பட, உண்மைகளின் ஒளி சுடர் விடவே செய்யும். மாந்தப் படிநிலை வளர்ச்சியின் கமுக்கம் இதுதான். பொறுத்திருந்து பார்ப்போம்? நல்ல விடியல் ஏற்படாமலா போய்விடும்! நம்பிக்கையோடிருங்கள்!

0

Scanned with CamScanner

எப்படிச் செயலாற்ற விடுவது?

11-10-'87-ஆம் நாளிட்ட 'ஆனந்த விகடன்' ஆசிரியவுரையைப் படித்தேன். 'எப்படிச் செயலாற்றப் போகிறுர்?' என்பது தலைப்பு. இதில் 'ஆனந்த விகடனின்' கவலை தெரிகிறது. அக் கவலையால் தலை கனத்து வினுவாகச் சரிந்து நிற்கிறது ஆசிரியவுரை!

அது 'காஞ்சி காமகோடி பீடாதிபதி செயேந்திர சரசுவதி சுவாமிகளின்' புதிய இயக்கம் பற்றி அக்கறையோடு எழுதப்பட்டுள்ளது! அந்த 'இந்து வெறித் துறவி', 'பாரத நாட்டுக்கு' 'இந்துசுத்தான்' என்று பெரிட வேண்டும் என்று அறிக்கை விட்டுள்ளாராம். 'பசு 'தேசிய விலங்காக வேண்டுமாம்!

'பாரதமே' கூடாதென்கிறேம், 'ஹந்துஸ்தானை' எப்படி நாம் ஏற்போம்? தமிழக மக்களின் 'கடவுள் நம்பிக்கை', மூடத்தனங்களின் மீது 'இந்து' என்ற அவப்பெயரை அரசின் துணையோடு திணித்து விட்ட தெம்பில், அடுத்த நடவடிக்கையில் இறங்கி விட்டனர், இந்துமத வெறியர்!

முசுலீம், கிறித்தவர் மட்டுமே வெளிநாட்டுப் பணத்தை 'இந்தியாவுக்குள்' கொண்டு வருவதாகக் கூறி, இந்து மதத்தின் பேரால், துறவிகள் என்ற போர்வைக்குள் 'வந்து போகும்' வெளிநாட்டுப் பணத்தை மறைத்து விடப் பார்க்கின்றனர்! நாம் எந்த வழியில் வெளியார் பிடி இறுகினுலும் அதனை எதிர்த்து நிற்றல் வேண்டும்! தமிழக மக்களின் உரிமைமேல் கைவைக்கும் எத்தகைய நடவடிக்கையையும் நாம் தடுத்துநிற்க அணியம் ஆதல் வேண்டும்!

எண்ணூர் அனல்மின் நிலையத்திற்கு 'இந்திய ஒருமைப்பாடு' பேசிக் கொண்டு 'பீகார் நிலக்கரி' சுரண்டுவதைத் தமிழக மக்கள் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது எந்தவகையில் நேர்மையுடைய செயல்? - இப்படி நாம், தமிழகத்தைத் தாண்டி, பனிமலையைத் தாண்டியுள்ள எந்த வல்லாண்மையையும் அதிகாரச் சாட்டையும் எதிர்ப்பதுதான் அரசியல் நேர்மை. இதனை 'மதவெறி'ப் பார்வையில் தெளிந்து கொள்ளுதல் இயலாததே ஆகும்! காமகோடியின் இயக்கம்,

'ஓர் இந்து மத இயக்கம்' போல் தோன்றும் என்று கூறி 'ஆனந்தவிகடன்' சப்பைக் கட்டு கட்டி விட்டு, 'முற்போக்குள்ள' அறிக்கை என முத்திரை போடும் தனது வேலையைச் செய்ய நினைக்கிறது. அதனுலேயே, 'மதச் சார்பற்ற பரந்த கண்ணேட்டமும் (!) தெரிகிறது' என்று கூறி மழுப்புகின்றது!

'மாந்தனே முதலில்' என்று பேசிவிட்டு, 'மதம், குலம் சாதி' என்பவற்றை இவர்களின்

(முன் பத்தி தொடர்ச்சி)

'இந்துசுத்தான் நீதி மன்றத்தில்' விட்டு விடவேண்டும் என்று அறிக்கை குறிப்பிடுவதாக ஆனந்த விகடன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்! வண்ணத்துப் பூச்சியை நூலில் கட்டிப் பறக்கவிட்டு வேடிக்கைபார்க்கும் 'ஆனந்தவிகடன்', காமகோடியின் கையினுல் 'வண்ணத்துப் பூச்சியின்' சிறகு முறிக்கப்படுவதை உணராமல் இருக்க முடியாது. தமிழ-

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

-பி. ஆரும் எம் .சி. ஆரும்-

தமிழர்களின் தலைஎழுத்தும், முதல் எழுத்தும் ஆங்கிலத்தில் உள்ளன. காரணம் நாம் இன்னமும் 'பள்ளி எழுச்சி' கொள்ளவில்லை. ஆங்கிலர் நம்மை அடிமை கொண்ட காலத்தில் உருவான தலைமைகள் தாம் அப்படி எனில், இன்று தமிழினம் விழிப்புற்ற காலத்தும் தமிழில் தலை எழுத்தை எழுதுகின்றவர் குறைவே!

பி. ஆர் என்று பி. இராம மூர்த்தி [இ. பொ. க. (மா)]யும், எம்.சி. ஆர் என்று ம.கோ. இராமச்சந்திரனும் (அ.இ.அ தி.மு.க) விளம்பரப் பட்டுள்ளார்கள். இவர்கள் இருவருமே அண்மையில் காலமாகி விட்டார்கள்.

பி. ஆர், 'இந்தியர்.' இவர் 'இந்தி'யத் துணைக்கண்டத்தில் வழங்கும் பல மொழிகளை அறிந்தவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர். பேராயக் கட்சி மேலிடத்தில் சாய்கால் பெற்றவர். ஆனுல், பொதுவுடைமைக் கட்சிகளில் ஒன்றின் முன்னேடித் தலைவர்.

எம். சி. ஆர் 'திராவிடர்'. நடுவண் அரசின் 'வேண்டு கோளுக்கு'ப் பணிந்து, அனைத்திந்தியக் கட்சியாகத் தம் கட்சியை மாற்றி யமைத்தவர். 'தமிழின நலனை,' இந்தியனுக்கு 'விட்டுக்' கொடுத்தவர்!

இந்த இருவரில் 'இந்தியனுக்காவே' நின்றவாரன பி. ஆர். இறந்த நாளை. 'இந்திய அளவில்' விடுமுறை நாளாக அறிவிப்பதிலோ, அவரைத் 'தேசியத் தலைவர்' என்று கொண்டாடுவதிலோ அக்கறை காட்டாத 'இந்திய அரசு', எம். சி. ஆரை மட்டும் பாராட்டித் தேசியத் தலைவராக அறிவிப்புச் செய்தது ஏன்?

தமிழர்க்குள் பிளவும், தமிழினத்தைத் தடுமாறப் பண்ணி, இந்தியச் சட்டியில் கரைந்து போகும் படி செய்யவும் 'இந்திய அரசு' மிகுந்த அக்கறையோடுள்ளது.

ஆயிரம் ஒருமைப்பாடு பேசினுலும், 'தனது எடுபிடிகளுக்காக மட்டுமே இந்திய ஆளும் கணம் உள்ளது' என்பதைப் பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள் எண்ணிப் பார்ப்பார்கள் என நம்புவோம்!

— தமிழன் —

சோவியத்து நாட்டின் மொழியின அமைப்புகளும், இந்தியத் தேசிய ஏமாற்றும்!

வரலாற்றுத்துறைப் பேரா. **செமியோன் கித்லின்**, தாசுகண்டு பல்கலைக்கழகம்.

O சோவியத்து நாட்டில் 36 இபெரோ காக்சிய மொழிகளும், 25 துருக்கிய மொழிகளும், 24 இந்திய ஐரோப்பிய மொழிகளும், 22 மங்கோலிய மற்றும் துங்குசோ மஞ்சூரிய மொழிகளும், 20 உக்ரோ பின்னிசு மொழிகளும் பேசப் பெறுகின்றன. அதிக மக்களால் பேசப்படும் மொழி, சிறுபான்மையினரால் பேசப்படும் மொழி, வளர்ச்சி பெற்ற மொழி, வளர்ச்சியடையாத மொழி என்னும் பாகுபாடில்லாமல், அனைத்து மொழிகளுக்கும் சோவியத்து நாட்டில் சம மதிப்பு வழங்கப் பெற்றுள்ளது. அங்கு இ'து அரசியல் சட்டக் கோட்பாடாகவே இருந்து வருகிறது.

சோவியத்து மக்கள் எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக் கொள்வதற்கும், தங்கள் குழந்தைகளுக்கு எந்த மொழியை வேண்டுமானாலும் பயிற்றுவிப்பதற்கும், முழு உரிமை அளிக்கப் பட்டுள்ளது.

அதே சமயம், பல தேசிய இனங்களுக்கும் இணைப்பு மொழியாக விளங்கும் உருசிய மொழியின் தன்மை அதிகமாகி வருகிறது. ஆனால் இ'து எந்த வகையிலும் அந்தந்தத் தேசிய இனங்களின் தாய் மொழிகளின் செயல் பாட்டுக்கோ, வளர்ச்சிக்கோ குந்தகம் விளைவிப்பதில்லை. உருசிய மொழி பிற தேசிய இனங்களின் தாய்மொழிகளை அழித்து விட்டு, அவற்றின் இடத்தைக் கைப்பற்றுவதில்லை.

சோவியத்து நாடு முழுவதிலும், அனைத்துத் தேசிய மக்களுக் கிடையிலும் கருத்துப் பரிமாற்றத்துக்குரிய கருவியாக உருசிய மொழியே தொடர்பு மொழியாக இருந்து வருகிறது.

சோவியத்து நாட்டில் தேசிய இனங்களுக் கிடையிலான பொருளியல், கலை, பண்பாட்டு ஒத்துழைப்பு, அரசியல், அறிவியல், தொழில் நுட்ப அறிவுப் பரிமாற்றம் ஆகியவை அங்குள்ள மொழிகள் ஒன்றை ஒன்று வளப்படுத்திக் கொள்வதற்கும், குமுகாய முன்னேற்றத்தின் தற்போதைய மட்டத்துக்கு அவற்றை உயர்த்து வதற்கும் வகை செய்கின்றன.

சோவியத்து நாட்டில், அங்குள்ள மக்களில் 93.1 விழுக்காட்டுப் பேர், அவர்கள் எந்த நாட்டுப் பகுதிகளில் வாழ்கிறார்களோ, அந்த நாட்டுப் பகுதி மொழியையே தங்கள் தாய் மொழியையாகக் கருதுகின்றனர். 1979-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் இந்த விளக்கம் தெரிய வந்தது.

உக்ரேனியர்களில்	82.8	விழுக்காட்டினரும்,
அர்மீனியர்களில்	90.7	விழுக்காட்டினரும்,
எசுத்தோனியர்களில்	95.3	விழுக்காட்டினரும்,
உசுபெக்தானியர்களில்	98.5	விழுக்காட்டினரும்,

— இவ்வாறு கருதுகின்றனர். (இது, நம் தமிழ் நாட்டில் உள்ள தெலுங்கர்களும், கன்னடியர்களும், சௌராட்டியர்களும் தங்கள் தாய்மொழி தமிழ் என்று கருதினால், எப்படியோ, அப்படிப் போன்றது.)

சோவியத்து நாட்டில் அனைத்து வட்டார மொழிகளும், தன்னுரிமையுடன் வளர்ந்து வருகின்றன என்பதை அமெரிக்க மொழியியல் பேராசிரியர் **வில்லியல் டி. டவுன்சென்ட்** அவர்களே ஏற்றுக் கொண்டுள்ளார். (இவ் விந்திய நாட்டில், இந்த வகையில், பிற வட்டார மொழிகளுக்குள்ள உரிமைகளைவிட இந்தி மொழிக்கே முதலிடம் தருவது போன்ற ஒருநிலை அங்கில்லை என்பதை உணரவும்.)

பேரா. **வில்லியம் டி. டவுன்சென்ட்** அவர்கள், **'பல தேசிய இனங்களைக் கொண்ட உலக இனங்கள், தங்கள் மொழிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குச் சோவியத்து நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்'** என அவர் குறிப்பிடுகின்றார்.

பன்மொழி பேசும் சோவியத்து நாட்டில், தேசிய இனங்களுக் கிடையில் பரந்த அளவிலான கருத்துப் பரிமாற்றம் இடையறாது நிகழ்ந்து வருகிறது. உருசிய மொழியைப் பயில்வதானது, வட்டார மற்றும் தேசிய இனக் கலை, பண்பாடுகளைச் செழுமைப் படுத்து வதற்கும், உலக நாகரிகச் செல்வங்களை எல்லாம் நேரடியாக அறிந்து தமதாக்கிக் கொள்வதற்கும் வகை செய்கிறது.

''எந்த வட்டார, தேசிய இனக் கலை, பண்பாடும் தனித்து ஒதுங்கி இருக்க முடியாது — என்னும் கோட்பாட்டையே, தேசிய இனக் கொள்கைத் தொடர்பாக சோவியத்துக் பொதுவுடைமைக் கட்சி பின்பற்றி வருகிறது. பிற கலை, பண்பாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வது, மற்றும் ஒன்றுக்கொன்று சாய்கால் செலுத்துவதன் மூலமாகவே, ஒரு தேசிய இனத்தின், அந்த வட்டாரத்தின் கலை, பண்பாடுகள் வளர்ச்சி பெற முடியும். கலை, பண்பாட்டுத் தொடர்பாக ஒரு தேசிய இனம் தனிமைப் பட்டு நிற்குமானால், தவிர்க்க முடியாதபடி அது பின்னடைவைச் சந்திக்க நேர்வது உறுதி'' —என்று அந்த அமெரிக்கப் பேராசிரியர் தம் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

ஒரு தமிழ்ப் படை தேவை.

அன்பின் அய்யா அவர்களுக்கு வணக்கம்,

கடந்த திங்கள் 2-ஆம் நாள் (2-11-87) அன்று நடைபெறுவதாக இருந்த 'மக்கள் தொடரி' (மனிதச் சங்கிலி)ப் போராட்டத்தில் இணைந்து கொள்ள நான் சென்னை வந்திருந்த போது தங்களைக் கண்டு உரையாடலாம் என எண்ணியிருந்தேன். ஆனால் மழையின் கரணியமாகத் தடைப்பட்டுப் போனதாலும், பல சூழ்நிலைக் கரணியங்களால் நான் உடனே திரும்ப வேண்டிய நிலையிருந்ததாலும், எனது நெருங்கிய தோழர் ஒருவரிடம் தங்களுக்கு மடல் ஒன்றைக் கொடுத்து விட்டு வந்தேன். 'அவர் தங்களிடம் விடை பெற்று அனுப்பி வைக்கிறேன் எனக் கூறியிருந்ததன் கரணியத்தால் இங்கு வந்த பின்பு நானும் மடல் எழுதவில்லை. எனவே பொருத்தருள்க. அம் மடல் தங்களுக்குக் கிட்டியிருக்கும் என நம்புகிறேன். ஆகவே, அதன் தொடராகவே இம்மடலைத் தொடருகிறேன்.

(அம் மடல் **தமிழ்நிலம்** இதழெண் 96-இல் வெளிவந்துள்ளது.)

உலகில் ஒவ்வொரு போராட்டத்தின் எழுச்சிக்கும் கரணியங்கள் இல்லாமல் இல்லை. அக் கரணியங்களாலேயே அவை எழுகின்றன. அவ்வகையில் தமிழக விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை எழுச்சிக்கான கரணியங்களை அம்மடலில் சுட்டியிருந்தேன். இம்மடலில் செயல் எழுச்சிக்கான கடமைகளை நானறிந்த வகையில் எழுதுகிறேன்.

ஒவ்வொரு போராட்டமும் எழுச்சியுறும் போது, அதற்கென உள்ளடக்கம், வடிவம், கடமை போன்றவையும் கூடவே எழுகின்றன. இவையாவும் போராட்டம் எழக்கூடிய காலநிலைகளைப் பொறுத்து அமைபவையாக இருக்கலாம். தமிழக விடுதலைப் போராட்டத்தின் தொடக்கக் காலக் கடமை, **ஆரியத்தினின்று தமிழை மீட்கும் தனித் தமிழ்ப் போராட்டமாக** எழுந்திருக்கலாம். அதற்கு வடிவம் தனித்தமிழ் இயக்கமாக அமைந்திருக்கலாம். அதன் மூலம் அப்போராட்டம் தொடர்ந்து, பின் கால நிலை மாற்றத்தால் உலகத் தமிழின முன்னேற்றக் கழகமாக வடிவெடுத்துத் தமிழர்களிடையே **மொழி, இனம், நாடு** எனும் அடிப்படையில் ஓர்மையைத் தனது போராட்டத்திற்குப் பெற முயன்றிருக்கலாம். அக்காலக் கருவிகள் '**தென்மொழி**', '**தமிழ்சிட்**'டாகத் தொடர்ந்து '**தமிழ்நில**' உரிமைக்காக இன்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கலாம். ஆதலால், '**தென்மொழி**' இன்றித் '**தமிழ் நிலம்**' இல்லை; **தமிழ்நிலம்** இன்றித் தமிழக விடுதலை இல்லை எனும் நிலை உருவாகியிருக்கலாம். இவை தமிழக விடுதலைப் போராட்டத்தின் தனி நிலை வரலாறுகள் ஆகும். ஆனால் **இவ்வரலாற்றின் இன்றைய தொடர்நிலைப் போராட்டமோ, தமிழையும், தமிழினத்தையும், தமிழகத்தையும் அவ்வந்தேறிய (ஆரிய) அரசாக உள்ள இந்திய வல்லரசிடம் இருந்து மீட்க முனையும் தன்மை உள்ளதாக இருக்கலாம்.**

இங்கு, போராட்டத்தின் உள்ளடக்கம் தமிழகத்தின் விடுதலையாகவும், அதன் வடிவம் தமிழக விடுதலை இயக்கமாகவும், கடமையானது கருவியேந்திப் போராடுதல் எனும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்த் தேசிய இயக்கத்தின் தொடக்கக் காலம் தனித்தமிழ் பேசுதல் எனும் மொழி மீட்பிற்கான கடமையை வலியுறுத்தியது. ஆனால் **நிகழ்காலமோ இன மீட்பிற்காகக் கருவியேந்துதல் எனும் கடமையை வலியுறுத்துகிறது.** அன்று மொழி மீட்பு முதன்மைக் கடமையாக இருந்தது; இன்று இனமீட்பு முதன்மைக் கடமையாக உள்ளது. அன்று மொழி மீட்புக்குத் தனித்தமிழ் கருவியாக அமைந்தது; இன்று இன மீட்புக்குத் ''**தமிழ்ப்படை**'' கருவியாகத் தேவைப் படுகிறது. எனவே தமிழகத்தின் விடுதலைக்காகத் தனிப்படை (ARMY)யைக் கட்டுதல் முதாமையானது எனக் கருதுகிறேன். இக்கடமையைத் தெளிவாக உணர்ந்திருந்ததால்தான் நமது தமிழகப் புரட்சிப் பாவலர் பாவேந்தர், தமிழக விடுதலைக்கு ஒரு படையமைப்புத் தேவை என்று,

மிடிமையே கொடுக்கும் குடிமையே கெடுக்கும்
அடிமை வாழ்வும் ஒரு வாழ்வா? — நம்
கொடிய தளையறுக்க உரிமைக்கொடி பறக்கக்
கூடிப் படை எடுத்தல் தாழ்வா?

என வினவெழுப்பி, அதற்காகத் தமிழர் போர்த் தொழிலைப் (Warfare) பயிலவேண்டும் என்பதையும்

பார்த் தொழில் அனைத்தும் கொண்ட
பயன் தரு ஆலைக் கூட்டம்
ஆர்த்திடக் கேட்ப தன்றோ
அணிபெறத் தமிழர் கூட்டம்
போர்த் தொழில் பயில்வு தெண்ணிப்
புவியெல்லாம் நடுங்கிற்றென்ற
வார்த்தையைக் கேட்டு நெஞ்சு
மகிழ்ந்து கூத்தாடல் என்றோ?

எனும் பாடலால் உணர்த்தினார். அவர் காலத்தில் கடமைதான் உணர்த்தப்பட்டதே தவிர, கடமையை நிறைவேற்றக் கருவி யேந்தும் பணி மேற்கொள்ளப் படவில்லை. இன்றும் அந்நிலைதான் நீடிக்கிறது. இதையே நான் முந்தைய மடலில் தெளிவான முறையிருந்தும் தெளிவற்ற முறையில் போராடி வருவது எனச் சுட்டியிருந்தேன். இக்காலச் சூழ்நிலையில் நமக்குப் போராட்டத்தின் வடிவமானது

தமிழக விடுதலை இயக்கமாகவும், கடமையானது கருவி ஏந்துதலாகவும், கருவியானது படையாகவும் விரிந்து நிற்கின்றன. எனவே நமது நிகழ்காலக் கடமை என்ன? அஃது ஒரு படையைக் (ARMY) கட்டியமைத்தலாகவே இருக்கும். இக்கடமையைத் தாங்களும்,

ஏட்டகத்துப் பலவாறுய்த் தமிழுணர்வை,
ஆள்வோருக் கெழுதிக் காட்டி
நாட்டகத்துத் தமிழர் நலம் நசுக்குகின்ற
போக்குக்கு நயன்மை கேட்டோம்.
வேட்டெஃகத்தை எடுத்தால்தான் விடுதலையே,
தமிழகத்தில் விளையும் என்றால்
பூட்டறுக்கப் புறப்படுவீர் மறவர்களே,
உரிமை நலம் புதுக்குதற்கே!

வாட்டுகின்ற வறுமைக்கும் எந்தமிழர்
அடிமை யிலே வாடு தற்கும்
நீட்டுகின்ற வெடிக்குழல்தான் ஒரு முடிவைத்
தமிழகத்தில் நிகழ்த்து மென்றால்
காட்டுங்கள் தமிழ் மறத்தை - தொல்லடிமைக்
கட்டறுக்கும் காளை யோரே
நீட்டுகின்ற பட்டயத்தில் நும் பெயரை
முதல் பெயராய்த் தீட்டுதற்கே!

எனும் பாடலால் தெளிவாகக் காட்டியுள்ளீர்கள். ஆனால் அத்தெளிவு இன்னும் உருப் பெறுததாகவே உள்ளது. **இங்கு நான் அறிய விரும்புவது கடமையை நன்கு உணர்ந்த பின்னும் கடமையாற்றுவதில் என்ன தடை என்பதையே ஆகும்.**

ஒரு கடமையை நிறைவேற்ற நாம் முனையுங் கால், முதலில் அஃதைப் பற்றிய தெளிவான வரையறைகளை நாம் பெறுதல் வேண்டும். ஏனெனில் அவ்வரையறையே அக்கடமை எத்தகையது, அக்கடமைதனை யாரால் நிறைவேற்ற இயலும், எவ்வகையில் அக்கடமையை நிறைவேற்றுவது எனவெழும் வினுக்களுக்கு விடையை அளிக்கும். நமது கடமையின் தன்மை யாதெனில், அது படையமைத்துப் போராடுதலே ஆகும். இப்படை யமைப்பில் இணைந்து போராடுபவர்கள் இளைஞர்களாகவே இருப்பார். அதனால்தான் தமிழினம் பட்டுளள தொல்லடிமையின் தளையறுக்கக் காளையரை அழைத்தோம். எனவே நமது விடுதலைப்படைக்கு (Liberation Army) இளைஞர்கள் தேவை. இங்கு தான் நமது கடமையில் ஒரு முகாமைச் சிக்கல் எழுகிறது. இதனால், முதலில் நிறைவேற்ற வேண்டிய கடமை தமிழகத்தின் விடுதலையா, அல்லது தமிழின் விடுதலையா, எனும் வினவை அச்சிக்கல் எழுப்புகிறது. தமிழகத்தின் விடுதலையால் தமிழ் விடுதலை பெறும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. தமிழகத்தின் விடுதலையைப் படையமைப்பால் வெல்ல முடியும். பாக்கள் தமிழ் உணர்வை மட்டுமே ஊட்ட முடியும். அதனால் நமக்கு இன்றைய தேவை படையமைப்பே ஆகும். தோழர் இலெனின் கூறுவது போல், **"நாம் கற்பனை ஊருக்குள் நுழைபவர்கள் அல்லர்"**. தமிழகத்தின் விடுதலைக்காக ஒரு கடுமையான போராட்டத்திற்கு வழியமைப்பவர்கள் ஆவோம். எனவே அவர் சுட்டிக் காட்டிய **"ஒவ்வொரு வகுப்பு (வர்க்க) உணர்வுள்ள தொழிலாளியும் போர் வீரராக வேண்டும்"** எனும் கூற்றிற்கேற்ப ஒவ்வொரு தமிழ் இளைஞனையும் கருவியேந்தும் போராளியாக மாற்ற வேண்டியதே நமது உடனடிக் கடமையாகும். தமிழினத்தின் விடுதலைக்குத் தமிழுணர்வு தேவை; தனித் தமிழும் தேவை; தனிப்படையும் தேவை. ஆனால் எது முதலில் தேவை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். எனவே நமது கடமைகள் விரிந்து நின்று கொண்டுள்ளன என்பதை நாம் மறந்தும் புறந்தள்ளல் கூடாது. இவற்றை உளத்தில் கொண்டே நாம் கடமைகளை ஆற்ற வேண்டும். இஃதை இன்றைய தமிழக இளைஞர்கள் எந்நிலையில் உள்ளனர் என்பதை அறிந்தால்தான் உறுதி செய்ய இயலும். அவர்களே கருவி யேந்தும் கடமையை நிறைவேற்றுபவர்களாக உள்ளவர்கள் ஆகும். எனவே அவர்களிடத்தில் தமிழுணர்வு விழிப்புப் பெறுமாறு நாம் கடமையாற்றல் வேண்டும். இக்கடமையில் இருந்து நாம் தவறினோமாயின் நமது விடுதலைப் போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிப் போராட்டத்தின் சுமையை வருங்காலத் தமிழ் இனத்தின் தலையில் கட்டியவர்களாகி விடுவோம். நான் நமது காலத்திலேயே தமிழும், தமிழகமும் விடுதலை பெற்று, அதில் வருங்காலத் தமிழினம் வளமாக வாழ வேண்டுமென விரும்புகிறேன். ஆனால் தவிர்க்க இயலாத நிலையில் நமது விடுதலைப் போராட்டம் அடுத்த தலைமுறைக்குச் செல்லுமானால் அதை ஏற்கவே வேண்டும் எனும் நிலையிலேயே இதைக் குறிப்பிட்டேன்.

தமிழகம் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுக் காலமாக அடிமைத் தளையில் வாழ்ந்த ஒரு நாடு (எனவே இதன் விடுதலைப் போராட்டமும் நீண்டகாலப் போர் முறையிலேயே நடத்தப் பெறுதல் வேண்டும்.) அவ்வடிமைத் தளையில் தமிழ் அழிக்கப்பட்டே வந்துள்ளது. இந்நிலையில் தமிழகத்தின் விடுதலைக்காக அணியப் படுத்த வேண்டிய இளைஞர்களைத் தனித்தமிழால் ஒருங்கிணைக்க இயலாது. ஏனெனில் தனித்தமிழ் இன்னும் பரவலாக்கப் படவில்லை. எனவே அவர்கள் பெற்று வரும் தமிழாலேயே அவர்களை ஒருங்கிணைத்து விடுதலையுணர்வுகளுடனேயே தனித்தமிழ்க் கல்வியையும் இணைத்து நாட்டு விடுதலையைப் பெற முயல வேண்டும். இதுவே இனி நாம் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைக் கடமையென நான் கருதுகிறேன். மேலும் அவர்களுக்கு போர்க்குணத்தை வலிவேற்றக் கூடிய புரட்சி நடைகளையும் இனிக்கையாள

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத்தும் இந்தியாவும்:

சோவியத்து ஒன்றியத்தில் அடங்கியுள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு தேசிய இனத்தின் மொழி மற்றொரு தேசிய இனத்தை நசுக்க முடியாத ஒரு குமுகாய அரசியலமைப்பு அங்கே இருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை — இங்கே உள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சம உரிமை இல்லை. தேசிய இனங்களின் உரிமைகளும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

அதே நேரத்தில் உலக நாடுகளில் உள்ளது போல், அடக்கப்படும் தேசிய இனம் எ'து என்பதையும் இங்கு நேரடியாக அடையாளம் காண முடியவில்லை.

இந்தியத் தேசியம் என்று உலகில் எங்குமே இல்லாத ஒரு வேடிக்கையான — ஏமாற்றுத்தனமான தேசிய அமைப்பால், பல்வேறு இனங்களும் சுரண்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு பார்ப்பன — வணிக கூட்டம் மட்டுந்தான் வசதியோடு சுரண்டிக் கொண்டு இருக்கிறது. இவர்களை இந்தியத் தேசிய அமைப்பு பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. எனவே இச் சுரண்டல் அமைப்பினை இவர்கள் பாதுகாக்கத் துடிக்கிறார்கள். இந்த இந்திய தேசியம் என்னும் (கற்பனைத்) தேசியத்தை 'இந்தி' என்று மொழியைத் திணித்துக் கட்டிக் காத்து விட விரும்புகிறார்கள்.

இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப் படுகிறது. அதற்குச் சொல்லப்படும் காரணம், அப்போதுதான் இந்தியத் தேசியம் வலிமையாக இருக்கும் என்பதுதான். இந்தியைத் தேசிய மொழியாக, இந்தி பேசாத மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. சோவியத்தில் உள்ளதுபோல் இங்கு அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சமத்துவமான உரிமை இல்லை.

அத்தகைய சமத்துவத்தை முரண்பாடுகள் முற்றிக் கிடக்கும் இந்தியத் தேசியத்திற்குள் கொண்டு வரவும் முடியாது இந்திய தேசியம் காண்பதில்தான், இங்கே தேசிய இனங்களின் விடுதலை பின்தங்கி யிருக்கிறது என்பது சுட்டிக் காட்டப் பட வேண்டியதாகும்.

நன்றி — 'விடுதலை.' 3-12-'86

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என நான் கருதுகிறேன். நாம் காலத்தின் நிலைகளுக்கு ஏற்ப கடமைகளைச் சீர்ப்படுத்திப் போராட்டத்திற்கு வலியூட்ட வேண்டும். இல்லையேல் போராட்டம் பொய்க் கதையாகி விடுவதற்கு வாய்ப்புண்டு.

சீனப் புரட்சியாளர் மாவோ, **''மக்களுக்குள் செல்லுங்கள்; மக்களைத் திரளுயுங்கள்; மக்களின் உளத்தோடு புரட்சியை இணைத்துச் வெல்லுங்கள்''** எனக் கூறியதைச் சென்ற மடலில் குறிப்பிட்டிருந்தேன். இதையே நமது புரட்சிப் பாவலர் பாவேந்தர்,

மக்களை ஒன்று சேர்; வாழ்வையுயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு''

எனக் குறிப்பிட்டுச் சென்றார்.

நாம் தமிழகத்தில் நடத்த விரும்புவது ஒரு மக்கள் புரட்சியையே ஆகும். அதில் தமிழின விடுதலையும் அடங்கியுள்ளது. அதற்கான எழுச்சியைக் காண வேண்டியவர்கள் மக்களே யாவர். எனவே அவர்களை நாம் எழுச்சியடையச் செய்ய வேண்டும். அதைத் தமிழுணர்வாக, தமிழக விடுதலை வேட்கை கொண்ட வகுப்பு உணர்வாக மாற்றம் அடையச் செய்ய வேண்டும். அதைக் கொண்டு நமது போராட்டத்தைச் செயல்வடிவில் முன்னெடுத்துச் சென்று தமிழகத்தில் ஓர் ஒப்புரவு (சோசலிச) அரசை நாட்டித் தமிழராட்சியை, ஏற்படுத்த வேண்டும்.

இந்நிலையில் நமது கடமை என்ன?
நாம் மக்களுக்குள் எவ்வாறு செல்வது?
எவ்வகைத் தன்மைகளைக் கையாள்வது?
எவ்வாறு மக்களை ஒருங்கிணைப்பது?
எவ்வாறு போராட்டத்தை முன்னெடுப்பது?

போன்ற வினாக்களுக்கு விடை காண்பது உடனடிக் கடமையாகும். எனவே இவற்றிற்கு விடைகளைத் தாங்கள் எனக்கு அளித்து உதவுவீர்கள் என நம்புகிறேன். நன்றி வணக்கம் அய்யா!

தமிழ் வாழ்க! வெல்க தமிழக மக்கள் விடுதலைப் புரட்சி! — செ. அமிழ்தன்., சென்னை.

வேர்வைக் குலமக்கள் விழித் தெழுந்தார்கள்;

*கனல் கனலாகக்
காற்று வெளியெல்லாம் —
புனல் புனலாகப்
பூமண் பரப்பெல்லாம்
வேர்வைக் குலமக்கள்
விழித்தெழுந்தார்கள்;
சுடர் சுடரெல்லாம்
சூழ்ந்து காட்டையெல்லாம்
சுட்டுப் பொசுக்கியதாலே,
சூழ்ச்சி சாம்பலாக
ஒளிவெள்ளம் பாய்ந்து ஓட
உரமாகி விளைந்தார்
உரிமைப் பயிர்களிங்கே;
இனியும் இங்கே பகைகள்
இருப்புக் கொள்ளல் அரிதே!*

— பறம்பை அறிவன்.

ஒரு புள்ளி விளக்கம்:

இந்தியா பாதுகாப்பிற் காகச் செலவிடும் தொகை!

இந்தியப் படைத்துறையில் 1980-81 -இல் இருந்த படை மறவர்கள் தொகை:

தரைப் படை (Army)	9,44,000 பேர்.
வான் படை (Air Force)	1,13,000 பேர்.
கப்பற் படை (Navy)	40,700 பேர்.

இன்றைய நிலையில் இந்திய முப்படைகளிலும் சேர்ந்து ஏறத்தாழ 40 இலக்கம் பேர் இருக்கிருர்கள்.

காவல் துறையிலும் ஏறத்தாழ 40 இலக்கம் பேர் இருப்பதாக மதிப்பிடப் பெறுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் படை வீரர்கள் 4 மடங்கு கூடுதலாகியுள்ளனர்.

வளர்கின்ற இந்தியப் பாதுகாப்புக்கான செலவுகள்:

1941-50-இல்	16 கோடி	உருபா.
1961-68-இல்	681 கோடி	,,
1973-74-இல்	1405 கோடி	,,
1979-80-இல்	3050 கோடி	,,
1981-82-இல்	4600 கோடி	,,
1982-83-இல்	5100 கோடி	,,

இப்பொழுது 87-இல் ஒருநாளைக்கு 14 கோடி உரு. ஆண்டுக்கு: 5124 கோடி உருபா.

இந்தியாவினின்று உருவாகும் படைத்துறைக் கான 450 வகைப் படைக் கருவிகள், ஈராக், ஈரான், நைசீரியா, தான்சேனியா, சோவியத்து ஒன்றியம், எதியோப்பியா — ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆனுல், அதே சமயம், மிகவும் ஆற்றல் வாய்ந்த அணுக்கருவி, பிற கருவிகளையும், போர் வானூர்திகளை. போன்றவற்றையும், செக்கோ சுலோவாகியா, பிரான்சு, பிரிட்டன், சோவியத்து ஒன்றியம், இத்தாலி, இசுபெயின், போர்ச்சுகல், அமெரிக்கா, மேற்கு செருமனி — ஆகிய நாடு களிலிருந்து இறக்குமதி செய்கின்றது.

O இந்தியப் படைத்துறையில் பணியாற்றும் படைமறவர்கள் தவிரப் படைக் கருவிகள் செய்யும் தொழிற் சாலைகளில் 2.8 இலக்கம் பேரும், மறைமுக வேலைகளைச் செய்வோர் ஏறத்தாழ 15 இலக்கம் பேரும், பாதுகாப்புத் துறையில் பணியாற்றுகின்றனர்.

O இவ்வளவு துறைகளில் இந்தியாவின் பாது

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

இலவயக் காலணித் திட்டம்!

'87 சூலை மாதம் வெளியான அ. தி. மு. க அரசின் வரவு செலவுத் திட்டத்தில் இலவயக் காலணி வழங்குவதற்கு உரு. 30 கோடி ஒதுக்கப் பெற்றதாகச் செய்தி வந்தது. இதற்கு முன்னர் அதற்கென உரு 20 கோடியே ஒதுக்குவதாகத் திட்ட மிட்டிருந்தார்கள். 20 கோடி 30 கோடியாக எப்படி உயர்ந்தது, ஏன் உயர்ந்தது என்றெல்லாம் கேள்வி முறையில்லை.

அதே போல் முன்னர் அறிவித்த திட்டத்தில் பால்வாடிகளில் சாரவுணவு பெறும் 15 இலக்கம் குழந்தைகளுக்கே காலணி வழங்குவதாக அறிவித்திருந்தார், குமுக நலத்துறை அமைச்சர் இரா. சவுந்தாராசன். ஆனுல், பின்னர் 63 இலக்கம் பேர் இதனுல் பயன் பெறுவர் என்று அறிவித்தார். எல்லாம் வாய்த்திட்டந்தான்!

இனி, கடந்த ஆகத்து மாதத்தில், இத்திட்டப் படி அண்ணு பிறந்த நாளில் காலணி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார். பின்னர் காந்தி பிறந்த நாளில் (அக். 2) வழங்குவோம் என்ருர்கள்.

அனுல், அண்ணு பிறந்த நாளில் போலியோ சொட்டு மருந்து திட்டம் கொண்டாடிக் காலணித் திட்டத்தைக் கிடப்பில் போட்டார்கள். காந்தி பிறந்த நாளிலும் காலணி வழங்கப் பெறவில்லை.

திசம்பர் 5-இல், திருச்சியில், பின்னர் அமைச்சர் தெரிவித்தார், "பொங்கல் நாளில் வழங்கப் படும்" என்று.

இடையில் முதலமைச்சர் மறைந்துள்ளார் அவருக்குப் புதை மேடையும் (சமாதியும்) கட்டி விட்டார்கள். இறுதியில் எப்படியும் 88க்குள் காலணி வழங்கப் பெற்றுவிடும் என்று அமைச்சர் அறிவித்துள்ளார். ஒரு வேளை இந்தத் திட்டம், முதலமைச்சருடன் சேர்த்து அவர் புதைகுழிக்குள்ளேயே புதைக்கப்பட்டு விட்டதோ தெரிய வில்லை.

ஆனுல், அதற்குள் இத்திட்டம் பற்றியும் இதன் பயன் பற்றியும் எல்லாரும் பேசி, ம. கோ. இரா. வின் புகழ்ப் பட்டியலில் இதனையும் ஒன்ருகச் சேர்த்துக் கொண்டார்கள்.

மொத்தத்தில் திட்டம் இன்று வரை நிறைவேற்றப்படவே இல்லை. ஆனுல், இது நிறைவேறவே இல்லை என்று கூடப் பலரும் தெரிந்து கொள்ளாமலேயே, முதலமைச்சர் புகழ் பாடிக் கொண்டிருக்கும் மூட மக்களைப் பற்றி என்ன சொல்வது? எங்கே போய் அழுவது? 0

(பொங்கலுக்கு முன்னர் எழுதிய கட்டுரை)

Scanned with CamScanner

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், ஐயா, உலகத்துத் தமிழர்களை ஒன்றுக எழுச்சிப்பெற எழுதுங்கள்! இதோ ஈழத்துத் தமிழன் சிங்கள இனவெறிக் கூட்டத்தை வெருட்டி அடித்து விட்டு, இந்தியக் கூலிப் படையுடன் பழந்தமிழரின் மறப்பண்போடு மோதிப், பார் வியக்க வரலாறு படைக்கின்ற இந்நேரம், தமிழர்கள் என்றும் அடிமைகளா உரிமை வாழ்வு பெற வேண்டியவர்களா எனத் தீர்மானிக்க வேண்டும்.

அன்பன் — **வலவன்**, முல்லையூர்.

அமைப்பைக் கட்டுவோம்!

"உ. த. மு. க"வின் கிளைகளைத் தமிழ்நாடெங்கும் கட்டமைத்திடல் வேண்டும். இதற்கு நான் அணியம் என்றுவரும், முன்னணி ஆர்வலர் மடல்களைத் ***'தமிழ்நிலம்'*** தாங்கி வந்தது. மகிழ்ச்சி!

தலைமை, ஏழுகொள்கைகளை ஏந்திச் செயல்பட எந்தத் தடையும் இட்டதில்லை. முன் முயற்சிகளை வாழ்த்தி வரவேற்கும் தலைமையினைப் பெற்றுள்ளோம்!

ஆகவே, ஈடுபாடு காட்டும் அன்பர்கள் ஒருங்கிணைந்து செயல்படுக. ஒப்புக் கொடுத்துவரும் அன்பினர் சேர்க்கையைத் தலைமை அரவணைத்துச் செல்லும். நம்புவோம்!

நம் குறைகளை நிறைவு செய்வோம் —
தளர்ச்சிகளைத் தகர்த்து முன்னேறுவோம்.
புதிய புதிய இளந்தளிர்கள்
அழிவுசெய்யும் பண்பாட்டு நசிவுகளை
எதிர்த்து வருகின்ருர்கள்!
அமைப்பாக்கும் செயல்மறவர்கள்
தொடர்பு கொள்க! இணைக!

அன்புடன், — ***பறம்பை அறிவன்.***
திருவள்ளுவர் நகர், பறம்பக்குடி, 623707.

தலைவனுக்கு ஏங்குகிறேம்...!

என் அரும்பெறல் ஆசிரியரீர், வணக்கம்.

'தமிழ்நிலத்தில் வெளியிடப் பட்டிருந்த பல அன்பர்களின் மடல்களைப் படித்தேன். நம் நல்லுணர்வு அன்பர்களின் பல்வேறு கோணல்களிலிருந்து ஆய்ந்துரைக்கும் கருத்துரைகளை வரவேற்கிறேன். எனக்கு அவை ஏற்கனவே நான் எடுத்து வைத்திருக்கும் முடிவுகளுக்கு வலுவூட்டும் வண்ணம் இருந்தன. மேலும் அவை எனது கிந்தனையைக் கிளர்ந்திருக்கின்றன. இத்தமிழ்நிலம் மெல்ல மெல்ல அதே நேரத்தில் விரைவாக ஒரு முழு உண்மையை நோக்கி நடையிட இருக்கின்றது, என்பதை மட்டும் அவை தொளிவாக்கியிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்ல வேண்ணடுமானுல் தந்தை பெரியார் அவர்கள்கூடத் தமிழ்நிலத்தின் புலம்பணை(ஆன்மாவை)ச்சரியாகக் காட்டவில்லை. காட்டத் தவறிவிட்டார் என்றே கூறலாம். அப்படிப்பட்ட ஒரு தலைவனுக்காக இத் தமிழ்நிலம் இன்று ஏங்கிக் கொண்டிருக்கின்றது என்று சொல்வேன்.

அடுத்து, இந்நிலையில் ...... போன்றவர்கள் சரியான தமிழ் நெஞ்சினர்களாக எனக்குப்படவில்லை. குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க விரும்பும் தன்மையராக அவர்கள் எனக்குத் தெரிகின்றனர். அவரவர்கள் அவரவர்களின் சின்ன ஆசைகளுக்கு வடிவம் கொடுத்துக் கொள்ளப் பார்க்கின்றனர் எனலாம்.

நன்றி, வணக்கம். இப்படிக்கு அன்றும்
இன்றும் என்றும் தங்கள் மாணவன்

— ***இளஞ்சித்திரன்,*** சென்னை-48.

முகுந்தன் மடல்!

வணக்கத்திற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்! ***தமிழ்நிலம்*** (இதழ் 94) இதழ் கண்டோம். த.ம. வி. க. செயலதிபர் தோழர், முகுந்தனின் மடலை வெளியிட்டிருந்தீர்கள். படித்தோம். உ. த. மு. க. வும் தி. மு. க. வும் இந்தியா எனும் உணர்வுடன் செயல் படுவதாகச் சாடியுள்ளார். புலிகள் மேலுள்ள பகைமைக்காக ஒன்றுமறியாத் தமிழினம் சாவதை இவர் விரும்புகிருரா? இவர் தம் கருவிகளைக் கையளித்து விட்டதால் அமைந்து விட்டதாகக் கூறுவாரா? தாங்கள் கலைஞரைச் சந்திப்பதிருக்கட்டும். இவர் இந்தியப் படையை எதிர்க்க மாட்டாரோ? அறிக்கை அனுப்பக் கூடவா இயலாது. தமிழர்களின் உயிர் பறிக்கப்படும் போது ஒப்பந்தமாவது? மண்ணுங்கட்டியாவது என்று தூக்கியெறிய மனமில்லையோ?

பின்னுளில் இவர் மீது இந்தியா தாக்காது என்று உறுதி மொழி பெற்றுள்ளாரா? இம்மட்டிலாவது, ஒருமடல் விடத்துணிந்தாரே பாராட்டுவோம்!

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"

என்றும் தங்களின் உண்மையுள்ள,
க. கதிர்குன்றன். அமர்பூண்டி - அ. நி.

அரசியல் இழிநிலை!

தலையாட்டி பொம்மை சானகி! தமிழகமே சீரழியும்!

ஒரு மாநிலத்தின் முதல்வர் பொறுப்பேற்றுத் தனித் திறமையால் செயல்பட முடியுமா? விடாப்பிடியான தந்நல அரசியல் விளையாட்டிற்குப் பலியாகித் தமிழக முதல்வர் வி. என். சானகி பதவி ஏற்பது, தலையாட்டி பொம்மையாக இருந்து எம். சி. ஆரின் புகழுக்கு ஊறு விளைவிக்க வழி வகுக்கும் என்பதோடு மட்டுமல்லாமல் தமிழகத்தில் குழப்பம் ஏற்பட்டு, இந்த மாநிலமே சீரழிந்து போகும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
கத் தேசிய உணர்வும், பல்வேறு தேசிய முனைப்புகளும் இந்தியாவில் அழிக்கப்படுவதற்கு அரசுக்குத் துணையாக நிற்கும் இயக்கமே காமகோடியின் இயக்கம்! இப் பழிகாரர்களிடமிருந்து தமிழர்களும் பிற 'இந்தியா'வில் உள்ள தேசிய இனங்களும் விடுதலை பெறும் காலம் விரைக விரைக!

மதச் சார்பு இல்லாமல் 'இந்தியர்' எல்லாரையும் இணைக்கும் வேலையை அவர் செயலாற்ற தமிழகத்தில் எப்படி நாம் விடுவோம்; அவர் உள் நோக்கம் அறிந்தும்! (இந்திபேசும் இந்தியாவில் அது நடக்கட்டும்) தமிழ் பேசும் தமிழகத்தில் அது நடவாது; நடக்கவும் விடமாட்டோம்!

துறவியாக நடிக்கும் பூனையிடம், 'இனி' — தமிழகம் — ஒருமைப்பாட்டை — இணைப்பை எதிர்பார்ப்பதற்கில்லை!

'தேசிய இனங்கள் எழுந்து போராடி — மக்கள் ஒருமைப்பாட்டை உருவாக்கும்!
அதற்கு இந்தச் 'சாமியார்' இயக்கம் சரிப்பட்டு வராது!

— "போராளி" —

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)
காப்புச் செலவு கூடுதலாகி வர வர, இந் நாட்டிற்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் பொருளியல் கேடுகள் வருமாறு.

1. நாட்டில் ஏற்கனவே 60 விழுக்காட்டிற்கும் மிகுதியான மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ச் சீரழிகின்றனர். இந்நிலையில் படைத்துறைச் செலவு கூடுவதால், மேலும் மேலும் மக்கள் வறுமைப் படுகின்றனர்.

2. படைத்துறைச் செலவு கூடுவதால் வேளாண்மை, தொழில் ஆகிய துறைகளின் செலவு குறைகிறது. இதனால் வளர்ச்சி கெடுகிறது.

3. மேலும் படைத்துறைக் கூடுதல் செலவால், கல்வி, சாரவுணவு, மருத்துவ வசதிகளைக் குறைக்க வேண்டி உள்ளது.

4. சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் போன்றவற்றின் உருவாக்கம் குறைகிறது.

5. பணவீக்கம் ஏற்படுகிறது.

6. வெளிநாட்டுச் செலாவணி குறைகிறது.

7. சேமிப்பு குறைகிறது. நாட்டின் பொருளியல் வளர்ச்சி கெடுகிறது.

—அடிப்படை 'சர்வோதயம்' நவ.' 87

தேசிய இன விடுதலைப் போராட்டத்தைப் புறக்கணித்து விட்டு, 'வர்க்கச்' சிக்கலை (ஏழை - பணக்காரன் சிக்கலை) முன்னிலைப் படுத்துதல், 'வர்க்கச்' சிக்கலையே அருவருப்புப் படுத்துவதாகும்.

— மார்க்சு.

ஐயோ தமிழரே!

O தமிழ் நாட்டில், பெரியார் ஈ.வே.இரா. அவர்களின் தன்மான இயக்கத்திற்குப் பிறகு அரசியலுக்கும், ஆட்சிக்கும் வந்த திராவிட மரபு 20 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு முடிவுக்கு வந்து விட்டது.

அ. தி. மு. க. கட்சி, திராவிட மரபில் வந்ததாகக் கூறிக் கொள்கிறது. அந்தக் கட்சியில் தற்போது பிளவு ஏற்பட்டுள்ளது. ஓர் அணிக்குத் தலைமை ஏற்றிருப்பவர் ஐயர் பெண்மணி (வி. என். சானகி). இன்னொரு பிரிவுக்குத் தலைமை ஏற்பவர் ஐயங்கார் பெண்மணி (செயலலிதா). பெரியாரும் அண்ணாவும் உங்களுக்கு விட்டுச் சென்ற திராவிட மரபு (பாரம்பரியம்) இதுதானா?

அ. தி. மு. க. கட்சிக்கு அரசியல் கொள்கைகளே எதுவும் கிடையாது. தமது கட்சியின் கொள்கை 'அண்ணாயிசம்' என்று எம். சி. ஆர். கூறுவார். அஃது என்ன என்று அவரும் விளக்கவில்லை. அவரைக் கேட்கும் துணிவும் எவருக்கும் இருந்ததில்லை.

—ஏ. கே. ஏ. அப்துல் சமது.
இந்திய ஒன்றிய முசுலீம் லீக் கட்சி.
தமிழ்நாடு - கிளைத்தலைவர்.
சன. 17. திருச்சி மாநாட்டுப் பேச்சு,

O புரட்சித் தலைவி என்ன என்ன கட்டளையிடுகிறாரோ அதைச் செய்து முடிக்க உயிரைக் கொடுக்கவும் நாம் அணியமாக இருக்க வேண்டும்.

—முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காத்தமுத்து

O அ. தி. மு. க. வுக்கு யார் யாரோ வந்தார்கள். ஆனால் புரட்சித் தலைவர் புரட்சித் தலைவியை மட்டுந்தான் அவரே அழைத்து வந்தார்.

—கே. சவுந்தரராசன்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் குழப்பங்களும் வன்முறைகளும் தவிர்க்கப் பட வேண்டும் அதற்கு ஒரேவழி உடனடியாகக் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்து மறு தேர்தல் நடத்துவதே சிறந்ததாகும்

பொதுமக்களின் நலனையும் மாநிலத்தின் அமைதியையும் கருதி, நாளை வரவிருக்கும் குடியரசுத் தலைவர் ஆட்சியை இன்றே கொண்டு வர வேண்டுமெனத் தமிழக ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அ. சேப்பன்.
இந்தியக் குடியரசுக் கட்சி (கவாய்)
மாநிலத் தலைவர்.

Scanned with CamScanner

தமிழனா?

-:பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு:-

ஈழத் தமிழரின் இன்னலை நீக்காமல்
இங்குண்டு களிப்பவன் தமிழனா?
இனவுணர் வின்றி அடிமைத் தொழும்பேறி
இவண் வாழ்ந் திருப்பவன் தமிழனா?
வாழத்தான் வேண்டுமா வல்லடிமை செய்து
வாழ்ந்திருப் பவனுமோர் தமிழனா?
வாழத்தான் வேண்டும் மானத்தோடு
வயிற்றுக்காய் வாழ்பவன் தமிழனா?

வீழத்தான் வேண்டுமா பகைவன்காலில்
வீழ்ந்து கிடப்பவனும் தமிழனா?
வீரத்தை வாயில் வெளிப்படுத்தி விட்டு
வெருண்டோடி ஒளிபவன் தமிழனா?
தாழத்தான் வேண்டுமா தமிழன் உலகிடை?
தன்மான மில்லாதவன் தமிழனா?
தன்னலம் பேணித் தரங்கெட் டிழிந்தித்
தரையினில் வாழ்பவன் தமிழனா?

தங்குலப் பெண்டிர் கற்பழி படுகையில்
தணலாய் எழாதவன் தமிழனா?
தானுடா விட்டாலும் தன்சதை ஆடுமிதை
தாங்கிக் கொண்டிருப்பவன் தமிழனா?
எங்கடா யாரவன் என்று சினந்தே
எழாதிருப்பவனும் தமிழனா?
எதுநடந்தாலும் கண்டுகொள்ளாமல்
இரந்துண்டு வாழ்பவன் தமிழனா?

பொங்கியெழுந் தின்னல் விளைப்போரைச்
பொசுக்கா திருப்பவன் தமிழனா? [சுட்டுப்
புழுவாய் நெளிவதோ! போற்றி
[உரிமைப்புலிப்
போத்தாய் எழாதவன் தமிழனா?
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடிப்
வேரறுக் காதவன் தமிழனா? [பகைவரை
விடுதலைப் போரில் வீறுகொண் டார்த்து
வெற்றியீட் டாதவன் தமிழனா? O

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

O புரட்சித்தலைவி சொன்னதைச் செய்வோம். அவர் சொல்வதுதான் சட்டம் ......

O திருச்சி மாவட்டம் புரட்சித் தலைவி பக்கம் நிற்கிறது. தமிழகம் கொதித்து எழும் காலம் வரும்.

வழக்கறிஞர் பெருமாள்
தொழிற் சங்கத் தலைவர்.

O புரட்சித் தலைவர் இல்லாத நேரத்தில் அவரால் உருவாக்கப்பட்ட 'எழுதப்பட்ட' சட்ட நெறிகள்தாம் கழகத் தோழர்கள் அனைவருக்கும் வேதம், சட்டம், ஆணை!

— இராகவானந்தம்.
அ. தி. மு. க. துணைப் பொதுச் செயலர்.

O எம். சி. ஆரின் புதைமேடை (சமாதி)யை உலகத்திலேயே தலைசிறந்த கட்டடத்திறனாளரின் கருத்தைப் பெற்று அழகு படுத்த இருக்கிறோம்.

— அமைச்சர். வி. வி. சாமிநாதன்.

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!
1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 17

பணத்தைச் செலவிட்டுப் பதவிக்கு வருபவர்களே பதவிக்கு வந்த பின் பணத்தை ஈட்டுகிறார்கள்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 98. TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.